# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS, (FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | |
|---|---|---|---|---|
| Case No | | | : | **O.S :73/2017** |
| Deposition of Witness | | | : | **வா.சா. 2** |
| Name | : | சிவக்குமார் | Occupation | விவசாயம் |
| Father's Name/ Husband | : | துரைசாமி | | |
| Village | : | வன்னக்குடி | Age | 52 |
| Taluk | : | திருவிடைமருதூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 24-03-2025

**சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் -** 04.10

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையில் பேரில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். கலியமூர்த்தி, அய்யப்பனை தெரியும். எங்கள் ஊரில் இருக்கும் கௌதமியை தெரியும். கலியமூர்த்தி இறந்துவிட்டார். அய்யப்பனுடைய மாமா தான் இறந்த கலியமூர்த்தி . கலியமூர்த்திக்கு வேண்டிய உணவு மற்றும் ஒத்தாசிகளை அய்யப்பன் தான் செய்தார். கலியமூர்த்தி குடியிருந்த வீட்டில் அய்யப்பன் தான் இருந்து வருகிறார். அய்யப்பன் குடியிருந்த வீட்டிற்கு தான் இந்த வழக்கு. கலியமூர்த்தி உயிருடன் இருக்கும் போதோ 30.01.2015 ல் ஒரு உயில் எ ழுதி வைத்தார். அந்த உயிலில் நான் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். 2 வது சாட்சியாக கண்ணன் கையெழுத்து போட்டுள்ளார். கலியமூர்த்தி கைரேகை வைத்ததை நான் பார்த்தேன். சாட்சிகள் கையெழுத்து போட்டதை கலியமூர்த்தி பார்த்தார். இன்னார் என்று நிரூபித்ததிலும் நான் முதல் கையெழுத்து போட்டிருக்கிறேன். வா.சா.ஆ.17 உயிலில் உள்ள என்னுடைய முதல் கையெழுத்து வா.சா.ஆ.18. இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் உள்ள என் கையெழுத்து வா.சா.ஆ.19.

சாட்சி விசாரணை முடிவடைந்த நேரம் - 04.14